மக்களே!

# குழந்தை இன்பம்

உலகில் மிக மகிழ்ச்சியான நேரம் எது தெரியுமா?நமது பிள்ளைகளுடன் நாம் இருக்கும் நேரம் தான்.தம்பதிகள் பிள்ளைப் பேற்றால் தானே முழுமை அடைகிறார்கள்?குழந்தை வரம் வேண்டி பல தம்பதிகள் தவிப்பதை மறக்க முடியுமா?

என்ன,ஏதோ மருத்துவம் பேசப் போகிறேன் என்று பார்க்கிறீர்களா?மக்களே!!!கல்யாணம் செய்வது சாதாரணம்.குழந்தை பெறுவதும் பெரிய விஷயமில்லை.ஆனால் அந்தக் குழந்தையை எப்படி வளர்க்கிறோம்?

''பெற்றுத் தருவது தாயின் கடமை.,நல்ல கல்வி தந்து சான்றோன் ஆக்குவது தந்தையின் கடமை'' என்கிறார் அவ்வையார்.

கல்வியால் சிறந்த மனிதனே உயர்ந்தவன் என்று காலம் காலமாக மனித இனம் கல்வியைப் போற்றுகிறது.இன்று ஒவ்வொரு தம்பதியும் இரவு பகலாக பாடுபட்டு பணம் சேர்த்து மக்களை நல்ல கல்வி படிக்க வைப்பதைப் பார்க்கும் போது பரிதாபமாகவும் அதே சமயம் பெருமையாகவும் உள்ளது.

என்ன பெற்றோர்களே,கோபம் வருகிறதா என் மீது?

உங்கள் பிள்ளை உயர்கல்வி படிகிறான்.சரி, அவன் ஒரு நல்ல முழுமையான பொறுப்புள்ள மனிதனாக,பண்பட்டவனாக இருக்கிறானா?இதைவிட முக்கியம்..,அவன் தனிமனிதச் சுதந்திரத்தினை முழுமையாகவும் சரியாகவும் பயன் படுத்துகிறானா?மனிதவாழ்வின் மிக உயர்ந்த ''சுதந்திரத்தினை'' முழு பொறுப்புணர்வுடன் அனுபவித்து மகிழ்கிறானா?

என்னடா இது,படிச்சோம்.,வேலை கிடைத்தது...யு.எஸ் போனோம்,டாலர்கள் சேமித்தோம்,கல்யாணம்,பிள்ளைகள்...என வாழ்க்கை ஓடும் போது சுதந்திரம் அது இது என்று பேசுகிறேனா?

இன்று ஒரு முக்கியமான நாள்.வன்முறையும்,ரத்தமும்,கவலையும்,அழுகையும்,வறுமையும் ,வெறுப்பும் நிறைந்த உலகில்,உயர்ந்த இன்பமான குழந்தைகள் மனிதனால் மறக்கப்பட்ட போது ஒரு பெண் தோன்றினார்.

அவர் இறைவனின் பெண் தூதர் என்றே கூறலாம்.அவர் உலகக்குழந்தைகளுக்காகவே,அவர்களின் மறுமலர்ச்சிக்காகவே அவதரித்தார்.இன்றோடு அவர் பிறந்து- வாழ்ந்து- சாதனைகள் பல புரிந்து நூற்றி முப்பத்தி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன.

அவர் தான் உலகக் கல்வி மேதை,டாக்டர்.மரியா மாண்டிசொரி.

இன்று உலகநாடுகள் வன்முறைக்கு முடிவு தேட இவரது கல்வியை நாடுகின்றன.மனிதனை மென்மை மிக்க மனிதனாக,அன்பின் அடையாளமாக உருவாக்குகிறது மாண்டிசொரி கல்வி.

தமிழ்நாடு அரசும் இன்று இத்திட்டத்தினைப் பள்ளிகளில் புகுத்தியுள்ளது.

நாளைய புதிய உலகம் பிள்ளைகளின் கைகளில் அல்லவா இருக்கிறது?

மாண்டிசொரி கல்வி அமைப்பின் அடித்தளமே குழந்தையின் வாழ்க்கை தான்.அவரது கல்வித்திட்டத்தைப் பயின்று உலகம் எங்கும் பல ஆசிரியர்கள் பல மாண்டிசொரி பள்ளிகளில் தெய்வீகப் பணி செய்துவருகிறார்கள்.

ஆனாலும் மாண்டிசொரி பள்ளிகள் நம் ஊர்களில் அதிக அளவு இல்லையே?ஏன்?

*இக்கல்வி முறை அதிகச் செலவு கொண்டது.
*மாண்டிசொரி ஆசிரியர்கள் பெரும்பாலும் உயர்குடி செல்வக் குடும்பப் பெண்களே.
*எனவே இக்கல்வி சென்னை,டில்லி,கல்கத்தா மற்றும் மும்பை போன்ற மாநகரங்களில் மட்டுமே உள்ளது.
*பெரும்பாலும் ஆங்கிலத்தில் தான் இந்திய மாண்டிசொரி பள்ளிகள் கற்பிக்கின்றன.
*இதை எல்லாம் விட முக்கிய காரணம்,"இந்தியர்களுக்கு குழந்தைகள் பிறந்தவுடனேயே டாக்டர்,இஞ்சினியர் ஆகி வெளிநாடு சென்றுவிட வேண்டும்.
*போட்டிகள் நிறைந்த உலகம் என்ற போலி வாழ்வில்,குழந்தைகளை வெறும் மனப்பாட மெஷின்களாகப் பெற்றோர்களும்,பள்ளிகளும் மாற்றிவரும் வேளையில் குழந்தைகளின் மனோநிலைப் பற்றி பேச ஏது நேரம்?

மாண்டிசொரி பள்ளியில்,கடந்த ஏழு ஆண்டுகளாகப் பணிபுரியும் அனுபவம் கடவுளால் தரப்பட்டது.அதன் பயனாகவே இன்று சக்திவித்யா மாண்டிசொரி பள்ளி,செந்துரை என்ற குக்கிராமத்தில் காந்தியடிகளின் ஒரு கனவாக முளைவிட்டு வளரத்தொடங்கி உள்ளது.

மாண்டிசொரி ஆசிரியர் என்ற முறையில் இரண்டு வயது குழந்தை முதல் பதினாறு வயது இளைஞன் வரை அன்றாடம் பழகி,வாழ்ந்து வருமெனது அனுபவம் பெற்றோர்களுக்கும்,பலக் கல்விமுறை ஆசிரியர்களுக்கும் தங்கள் குழந்தைகளை நல்லபடியாகப் புரிந்து கொள்ள உதவட்டும்.

*எனது கட்டுரை எவ்விதக் கல்வியையும் குறைகூறாது.
* ஆனால்,பெற்றோரும் ஆசிரியர்களும் "நான்,என் படிப்பு,பதவி,பட்டம்,வயது,அனுபவம்" போன்றவற்றைக் கழற்றி வைத்துவிட்டுப் படிக்குமாறு வேண்டுகிறேன்!!!!!
நண்பர்களே!!!இக்கட்டுரை நமக்கு நாமே நடத்தும் "சத்திய சோதனை".

**டாக்டர்.மரியா மாண்டிசொரி:**

இவர் இத்தாலி நாட்டுப் பெண்மணி.சைராவலி என்ற சிறு ஊரில் ஆயிரத்தி என்னூற்றி எழுபதாம் ஆண்டு,ஆகஸ்ட்டு மாதம் முப்பத்தி ஒன்றாம் தேதி பிறந்தார்.சிறு வயதில் பள்ளிப்படிப்பினை நல்ல படியாக முடித்தார்.ஆனால் அக்கால வழக்கப்படி ஒருபெண்ணாகிய அவருக்கு மேற்கொண்டு படிக்கப் பல தடைகள் உண்டாகின.பெற்றோர் விரைவில கல்யாணம் செய்துவைக்க முயற்சி செய்தனர்.ஆனால் மரியா பலவாறு போராடி எப்படியோ கல்லூரியில் கணக்குப் பாடத்தில் சேர்ந்துவிட்டார்.

அக்காலத்தில் ஒரு பெண் கணக்குப் பாடம் படிப்பது பெரும் சர்ச்சைக்கும் கேலிக்கும் உள்ளானது.மரியா தளரவில்லை.மரியா மிகுந்த கடவுள் நம்பிக்கை உடையவர்.மிகச்சிறந்த ஆன்மீகவாதி.ஆனால் இன்று நம் நாட்டில் பல மாண்டிசொரிபள்ளிகள் ஆன்மீகக் கல்வியை போதிக்கின்றனவா?

மரியா பட்டதாரி ஆனார்.மருத்துவ சேவை அவரை அழைத்தது.என்ன ஒரு பெண் மருத்துவர்
**ஆன்மீக பலமே காவல்:**
ஆவதா?மரியா மருத்துவக் கல்லூரியில் சேர மிகவும் போராட வேண்டி இருந்தது.கடவுள் துணை செய்தார்.இதோ மரியா ரோம் நகர மருத்துவக் கல்லூரியில் முதல் மருத்துவ மாணவியாக உள்ளே வருகிறார்.
நினைத்துப் பாருங்கள் எல்லாரும் ஆண் மாணவர்கள்.மரியா மட்டுமே பெண்.கல்லூரிப் பேராசிரியர்கள் கூட அவரைப் பொருட்படுத்தவில்லை.தனியாக விலக்கப் பட்டார் மரியா.பாடங்கள் மறுக்கப்பட்டன.மனமும் உடலும் சோர்வு அடைந்தன.,தளர்ந்தார் மரியா.

பெற்றோர்கள் அவரைப் படிப்பைத் தொடர வேண்டாம் என்றனர்.அவரும் கல்லூரியை விட முடிவு செய்தார்.

ஆம் மரியாவின் ஆன்மீக உணர்வு அவருள் புதிய தெம்பினை ஏற்படுத்தியது.மறுநாள்.......மரியா புதிய புதுமைப்பெண் எனப் புறப்பட்டார் கல்லூரிக்கு.தானே முயன்று படித்தார்,ஆய்வுகள் பல மேற்கொண்டார்........இத்தாலியின் முதல் பெண் மருத்துவர் ஆனார்.
மரியா இப்போது ``டாக்டர்.மரியா மாண்டிசொரி.

இக்கால மருத்துவ மாணவர்களே....லிசன் ப்லீஸ்!!!
இக்காலப் பல இளைஞர்கள் தாங்கள் மருத்துவராகி சேவை செய்யப் போவதாகக் கூறுவர்.மனதைத் தொட்டுக் கூறுங்கள்! எத்தனை டாக்டர்கள் அப்படி சேவை செய்யவந்துள்ளீர்கள்?உங்களைச் சொல்லிக் குற்றமில்லை.பாவம் உங்கள் பெற்றோர்கள் பார்க்கும் கல்யாண வரனும்,வெளிநாட்டுப் பணமும் ஏழைகளை எப்படி ஞாபகப் படுத்தும்?

ஆனால் மரியா தான் சொன்னபடி தன் மருத்துவ சேவையை ஆரம்பித்தார்.யாருக்குத் தெரியுமா?

பிறவியிலேயே மூளை வளர்ச்சி குன்றிய,பல உடல் ஊனங்கள் கொண்ட பிள்ளைகளுக்காக.மரியாவின் மருத்துவம் அக்குழந்தைகளின் அடிப்படை அறிவின் வளர்ச்சியிலும்,பகுத்தறிவின் பக்குவத்திலும் கவனம் செலுத்தியது.
இதன் பயனாக அவர் பல ஆய்வுகளைச் செய்து,பல செயல்பாட்டுக் கருவிகளை உருவாக்கினார்.பிள்ளைகள் அக்கருவிகளைக் கொண்டு வேலை செய்தனர்.நாளைடைவில் அப்பிள்ளைகளின் அறிவுத் திறன் சாதாரண குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு ஈடானது தெரியவந்தது.மரியாவின் இந்த ஆய்வுகளை மெதுவாக மருத்துவ உலகமும் ,கல்வி நிறுவனங்களும் கவனித்தன.மரியாவை உலக நாடுகள் அழைத்துப் பேசின....அதன் முடிவாக.,

ஆயிரத்தி தொள்ளாயிரத்தி ஏழாம் ஆண்டு,ஜனவரி மாதம் ஏழாம் தேதி ரோம்நகரின் ஒரு ஓரத்தில் இருந்த பாழைடைந்த தொழிலாளர் குடியிருப்பு ஒன்றில் ``காசா டி பாம்பினி``{குழந்தைகளின் வீடு} என்ற முதல் மாண்டிசொரி பள்ளி மலர்ந்தது.சேற்றில் தானே செந்தாமரை மலரும்?

காசா டி பாம்பினியில் அப்படி என்ன விஷேஷம்?
இரவு பகல் பாராமல்,அரை வயிற்றுக் கஞ்சிக்காக வேலை செய்யும் கூலித்தொழிலாளர்கள் வாழும் பகுதி அது.பெரியவர்கள் எவரும் இல்லாத வீடுகள்.அவிழ்த்துவிட்ட கழுதைகளாய்ப் பல வயதுக் குழந்தைகள்,சிறுவர்கள்,.அப்பப்பா............அத்தனை ஆர்பாட்டம்,அட்டூழியம் என ஒரே அமர்க்களம்!!!

அரசு,மரியாவை அழைத்து இப்பிள்ளைகளுக்காக ஏதாவது செய்ய முடியுமா என்று வேண்டியது.
ஒரு எட்டாவது படித்த பெண்ணின் துணையுடன்,ஒரு பெரிய குடோன் சுத்தம் செய்யப் பட்டு பள்ளி உருவானது.
முதல் நாள்....பலகுழந்தைகள்.....புதிய சூழல்...ஒரே அழுகை,சத்தம்......அரசு அதிகாரிகள் புரியாமல் விழித்தனர்.மரியா வந்தார்.,பைபிளில் ,ஏசு பிள்ளைகள் பற்றிக் கூறும் சில பகுதிகளைப் படித்தார்...,ப்ரார்த்தனை செய்தார்.மெதுவாக அவர் உருவாக்கிய கல்வி சாதனங்கள் அறிமுகப் படுத்தப் பட்டதும் சற்று நேரத்தில் எல்லாப் பிள்ளைகளும் அமைதியாக அமர்ந்து................என்ன செய்தனர்?சீக்ரட்.......

**எப்படி வந்தது இந்த அமைதி?!**

பிள்ளைகள் கல்விச்சாதனங்களை வைத்து விளையாடவில்லை...வேலைசெய்தனர்.அதுதான் மாண்டிசொரியின் மாயாஜாலம்.
மாண்டிசொரி பள்ளிகளில் பல கல்விச் சாதனங்கள் அன்றாட வீட்டு உபயோகப் பொருள்கள் தான்.டம்ளர்கள்,பாத்திரங்கள்,சீமார்,....மனிதன் அன்றாடம் செய்யும் அனைத்து வேலைகளும் அங்கே பிள்ளைகள் செய்வர்.
மெதுவாக கண்,காது,தோல்,மூக்கு,நாக்கு,சதைகள்,நரம்புகள் என உடலின் அனைத்து பகுதிகளும் முழு ஆற்றல் பெற ஊக்குவிக்கும் சாதனங்கள் தரப்படுகின்றன.அவை மாண்டிசொரியால் மருத்துவ ரீதியாக அறிவியல் பூர்வமாக செய்யப்பட்டவை.
உடலாலும் மூளையாலும் வளர்ச்சி குறைவுற்ற பிள்ளைகளே இச்சாதனங்களால் பெரியபயனை அடையும் போது,சாதாரணமான நல்ல உடலும் மனமும் கொண்ட பிள்ளைகள் மிகப்பெரிய பயனைப் பெறுவார்கள் இல்லையா?இதை உணர்ந்த கல்வியாளர்கள் உலகம் எங்கும் மண்டிசொரிக் கல்வி முறையை அறிமுகம் செய்யத் தொடங்கினர்.மரியாவின் கல்வி பல அமைதியான,அன்பான,முழுமனிதனை உருவாக்கியது.அதனால் தானே நம் தேசப்பிதா காந்திஜி மரியாவை இங்கு அழைத்தார்.?என்ன புரிகிறதா? மாண்டிசொரிக் கல்வியின் அருமை?!

**மாண்டிசொரி உணர்ந்த குழந்தைகளின் மகத்வம்:**
மனிதன் தாயின் வயிற்றில் கருவான நாள் முதலே அவனுடைய கல்வி ஆரம்பம் ஆகிறது.தாயே மனிதனின் முதல் ஆசிரியர்.எனவே ஒருதாய் கர்ப்ப காலத்தில் எப்படி தன் கருவை அறிவால்,உணர்வால்,திறத்தால்,ஆன்மீகத்தால்,உணவால்,செயல்களால் வளர்க்கிறாளோ., அப்படியே குழந்தை உருவாகிறது.அதனால் தான்'' தாயைப் போல் பிள்ளை'' என்கிறார்கள்.மனிதனுக்கு மிகவும் தேவை சுதந்திரம்.இச்சுதந்திரம் முழு பொறுப்புடன் கையாளப் பட வேண்டும்.மனிதன் எப்படி இச்சுதந்திரத்தினை உணர்வது?அனுபவிப்பது என்று மாண்டிசொரிக் கல்வி கற்றுத் தருகிறது.

ஒரு மாண்டிசொரி பள்ளி எப்படி இருக்கும்?
*மாண்டிசொரி அம்மையார் மனித வாழ்வை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கிறார்.அதில் மிகவும் முக்கியமானது இரண்டரை வயது முதல் ஆறு வயது வரைக் குழந்தைகளுக்கான பள்ளி.அதைப் பற்றியே நாம் அதிகமாகப் பேசப் போகிறோம்.

அம்மாவின் கத கதப்பான அரவணைப்பில் வாழும் பிள்ளை மெதுவாக வெளியுலகிற்கு வரவேண்டும்.பிறந்தது முதல் அம்மா,அப்பா,பாட்டி,தாத்தா,மாமா,அத்தை என நெருங்கிய வட்டத்தில் வாழ்ந்த குழந்தை மெதுவாக பல புதிய மக்களைப் பார்க்கப் போகிறது.என்ன சார் நீங்க சொல்ற உறவுகள் பல இன்னிக்கு எங்கே இருக்குனு கேட்பது எனக்கு கேட்கிறது.அம்மா கூட ஒருமாத லீவ் முடிந்து ஆபீஸ் போய்விடுகிறாள்.

*இக்குழந்தைகள் செல்லும் மாண்டிசொரி பள்ளி அழகான வீடு தான்.
*சுத்தமான,எளிய,அழகான,பெரிய வீடோ...கட்டிடமோ இருக்கும்.
*அதில் மிகவும் ஒழுங்காக மாண்டிசொரிக் கல்விச் சாதனங்கள் குழந்தைக்கு எட்டும் உயரத்தில் வைக்கப் பட்டிருக்கும்.
*குழந்தைகள் கீழே உட்கார்ந்து,விலாசமாக கை,கால்களை அசைத்து வேலை செய்ய பாய்களோ,தரைவிரிப்புகளோ இருக்கும்.
*பள்ளியில் கண் கவரும் விளையாட்டுப் பொருள்களோ,பொம்மைகளோ இருக்காது.காரணம்:மாண்டிசொரி பள்ளிகள் விளையாட்டுக் காட்டும் பள்ளிகள் அல்ல,குழந்தைகள் காப்பகமும் அல்ல.
*அங்கே பிள்ளைகள் விளையாடுவதில்லை,வயதிற்குத் தேவையான வேலைகளைச் செய்து,உடலையும்,மனதையும்,அறிவையும் வளர்த்துக் கொள்கிறார்கள்.குழந்தைகளுக்கான ''மினி'' உலகம் அங்கே உள்ளது.
அன்றாடம் நாம் வீட்டில் பயன் படுத்தும் அனைத்து சாமானங்களும் குழந்தையின் வயதுக்கும் உருவத்துக்கும் ஏற்ப தரப்படுகின்றன.

*இருபது பிள்ளைகளுக்கு இரண்டு ஆசிரியர்கள் தான் இருப்பார்கள்.
*மாண்டிசொரி ஆசிரியர்கள் அமைதியாக ஒரு இடத்தில் உட்கார்ந்து பிள்ளைகள் வேலை செய்வதைக் கூர்ந்து கவனிப்பர்.
*தேவையான போது பிள்ளைக்கு வேண்டியதைக் கற்றுத் தருவர்.
*பிள்ளைகள் அமைதியாக,எல்லாவிடத்திலும் அமர்ந்து கொள்ளலாம்.
*ஆசிரியர் ஒரு தாயாக,அரவணைப்பும் கொண்டவராக இருப்பார்.பிள்ளைகளும் நட்புடன் பழகுவர்.பயம் இருக்காது,ஆனால் தன் ஆசிரியரிடம் தாயிடம் வைக்கும் அன்பும்,மரியாதையும் இருக்கும்.
*எந்தச் சூழலிலும் கத்தியோ,அதட்டியோ,மனமும்--உடலும் புண்படும்படி நடந்து கொள்ள மாட்டார்கள்.
*பிள்ளைகள் சுதந்திரமாக அறை முழுதும் நடப்பர்,தாங்கள் விரும்பிய வேலைகளை,சாதனங்களை எடுத்து வேலைச் செய்தபின் ,சுத்தம் செய்து,பழைய இடத்திலேயே அவற்றை வைப்பர்.
*பிள்ளைகளுக்கே உரிய துறுதுறுப்பும்,குறும்பும் கத்தலும் இருக்கும்,ஆனால் வன்முறை இருக்காது.
*மாண்டிசொரி ஆசிரியர்கள் பிள்ளைகளின் வழியில் பின் சென்று தேவையானவற்றை உரிய காலத்தில் சொல்லித்தருவர்.
*இரண்டாரை முதல் ஆறு வயதுப் பிள்ளைகள் கலந்தே இருப்பர்.
*இதனால் அவர்களிடையே அன்பும்,பாசமும்,உதவும் மனப்பான்மையும்,விட்டுக்கொடுத்தலும் வளர்கிறது.
*ஒவ்வொருநாளும் பிள்ளைகள் பயில்வதைக் கூர்ந்து கவனிக்கும் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் விரிவாக எழுதிவைப்பர்.
*அறிவு என்பது வெறும் எழுத்தும்,கணக்கும்,பாட்டுமல்ல.பிள்ளையின் ஒவ்வொரு அசைவும்,செயலும்,பேச்சும் அறிவின் வெளிப்பாடே.அவை எல்லாம் பெற்றோர்களுக்கு அழகாக,எவ்விதப் பாகுபாடும் இன்றி ரிப்போர்ட்டாக தரப்படும்.
*ஒவ்வொரு குழந்தையும் உடல் அளவில்,பேச்சில்,பாடத்தில்,மொழித்திறனில் ,பழக்கவழக்கத்தில் வளர்ச்சிநிலை எங்கு உள்ளது என்று பெற்றோர்களுக்கு மாண்டிசொரி பள்ளி வழிகாட்டுகிறது.
*மெதுவாக அவர்களை அடுத்த நிலை வளர்ச்சிக்கு அவர்கள் அறிமுகப்படுத்தப் படுகிறார்கள்.
*மாண்டிசொரி மாணவர்கள் பெரும்பாலும் அமைதியானவர்கள்,அன்பானவர்கள்,சமுதாயத்துடன் விரைவில் எளிதாகப் பழகுபவர்கள்.
*தாங்கள் எண்ணியதை தைரியமாக வெளிப்படுத்துவர்.
*தவறுகளைத் தட்டிக் கேட்பர்.
*இவர்கள் இயற்கை விரும்பிகள்,கஷ்டங்களைக் கண்டு வருத்தப்படுவார்கள்.
*எல்லாத் துறைகளிலும் பரந்த அறிவு உடையவர்கள்.மேல்நிலைப் பள்ளியில் எந்த கல்வித்திட்டத்திலும் படித்து வெற்றி பெறுவர்.
*தாங்களாகவே சுயமுயற்சியுடன் படித்து,அறிவை விரிவு செய்பவர்கள்.
*கலைகளிலும்,புதிய புதிய விஷயங்களிலும் ஈடுபாடு கொண்டவர்கள்.

இன்னும் எவ்வளவோ சொல்லலாம்.
என்ன இளம் தம்பதிகளே!பிறக்கும் பிள்ளைக்கு ஒரு மாண்டிசொரி பள்ளி தேடுகிறீர்களா?

இப்படிப் பட்ட உயர்ந்த கல்வியை வடிவமைத்த மாண்டிசொரியை காந்தியடிகள் இந்தியாவுக்கு அழைத்தார்,ஏன் தெரியுமா?
உலகினையே ஆட்டிப் படைத்த இத்தாலி நாட்டு சர்வாதிகாரி முசோலினி மாண்டிசொரியின் கல்விக் கூடங்களை இத்தாலி எங்கும் திறந்தார்.என்னடா ஆடும் ஓநாயும் ஒன்றாகத் தண்ணீர் குடிக்கிறதா?அவசரம் வேண்டாம், மேலே படியுங்கள்.........

**உலகப் போரால் வந்த நன்மை:**

மன்னிக்கவும்,ஒவ்வொரு செயலும் நன்மைக்காகவே என்று நம்புகிறோம்.அது உண்மை தான்.இரண்டாம் உலகப் போருக்கு ஐரோப்பாவே ஆயத்தம் ஆகிறது.முசோலினி மாண்டிசொரிக்கு அழைப்புவிடுகிறார்.தனக்கு ஒத்துழைப்பு தருமாறு வேண்டுகிறார்.ஆண்டவனே வந்து பரிந்துரை செய்தாலும் தான் வன்முறைக்குத் துணைபோக முடியாது என்று மாண்டிசொரி கூறுகிறார்.

முசோலினி விடுவாரா?விடிவதற்குள் இத்தாலியின் அனைத்து மாண்டிசொரி பள்ளிகளையும் மூடினார்.மாண்டிசொரியும் இத்தாலியைவிட்டு வெளியேறினார்.

**அடையாறு வளர்த்த கல்விப் பயிர்:**

சென்னை மாநகரில் இரண்டு ஆறுகள் இன்று நமது சுயநலத்தினால் கழிவாறுகளாக மாறி ஓடுகின்றன.ஒன்று கூவம்,மற்றொன்று அடையாறு.

காதலி காதலனைத் தேடி ஓடி வந்து அடைவது போல்,கடலை வந்து அடைவதால் ''அடை ஆறு'' எனலாம்.அல்லது கோழி தன் குஞ்சுகளை அன்புடன் அடைகாப்பது போல் தன் மண் வளத்தால் ஒருகாலத்தில் மக்களை உணவூட்டி அடை காத்ததால் ''அடையாறு'' என்றும் கூறப்படும்.

ஒன்வொரு நாளும் அடையாற்றைக் கடக்கும் போது ஏதாவது வழியில் அதற்கு மரியாதை செய்ய மனம் துடிக்கும்.சரியான சமயத்தினை இறைவன் இப்போது தந்துவிட்டான்.நன்றி பல கோடி!!!

வைகை தமிழை வளர்த்தது,காவிரி கலைகளை வளர்த்தது,தாமிரபரணி ஞானத்தினை வளர்த்தது.நம் சென்னை அடையாறு மாண்டிசொரிக் கல்வியை வளர்த்தது.

மாண்டிசொரியை அண்ணல் காந்தி இந்தியாவிற்கு அழைக்கிறார்.சென்னைத் திருவான்மியூரில் உலகம் புகழும் பரதநாட்டியப் பள்ளியை உருவாக்கிய திருமதி.ருக்மிணிதேவியின் கணவர் டாக்டர்.அருண்டேல் மாண்டிசொரியின் தோழர்.அவர்மூலம் காந்தி மாண்டிசொரிக்கு அழைப்புவிடுக்கிறார்.வந்தே வந்துவிட்டார் மாண்டிசொரி சென்னைக்கு.

அடையாறு ஆலமரத்தடியில்...

ஆலமரத்தடியில் சிவன் தட்சினாமூர்த்தியாக அமர்ந்து ஞானம் தருகிறார்.மாண்டிசொரி அம்மையார் அடையாறு ஆலமரத்தடியில் தியோசொபிகல் கட்டிடத்தில் தங்கி,கேஷ்மீர்-----குமரிவரை இருந்து வந்த பல இளைய ஆசிரியர்களுக்குப் பயிற்சி தந்தார்.அம்மையாரும் அவர் மகனும் பத்து ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்து கல்விப்பணி ஆற்றினர்.பல மாண்டிசொரி பள்ளிகள் திறக்கப் பட்டன.

அண்ணல் காந்தியின் வேண்டுகோள்.....!!!

மாண்டிசொரி இந்தியாவிற்கு வரும் முன்னரே பல பள்ளிகள் அவரது கல்விமுறையைக் கடைப்பிடித்துள்ளன.அவ்வளவு ஏன்?ராஜஸ்தானில் பல பாலைவன கிராமங்களில் மாண்டிசொரிபள்ளிகள் இருந்துள்ளன.

இதோ அண்ணல் காந்தியின் கடிதத்தில் இருந்து சில வரிகள்,

'' மேடம் மாண்டிசொரி அவர்களே!தாங்களின் கல்வி இந்த நாட்டின் கிராமங்களில்,குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சென்று சேர விரும்புகிறேன்,உலக அமைதிக்கு நமது பணி மிகவும் முக்கியம் என்று நம்புகிறேன்....''

அண்ணலின் கனவின் அணுவளவை நிறைவேற்றுவதில் சக்தி பவுண்டேஷன் முயற்சி செய்வதில் மகிழ்ச்சி!கடவுளுக்கு நன்றி!!!

எனவே அடையாற்றினைக் கடக்கும் போது மனதால் நன்றி கூறுகிறேன்!அதன் கரையிலேயே நான் பணிபுரியும் மாண்டிசொரி பள்ளி ஆரம்பம் ஆனது பாக்கியம்.இன்று அடையாறு ஆலமரத்தின் மாண்டிசொரிக் கல்வி விழுது செந்துரையில் வேர்விடத் துடிக்கிறது!

என்ன அன்பர்களே,மாண்டிசொரியின் பெருமைகளைக் கேட்டீர்களா?இனி மாண்டிசொரி கூறும் குழந்தைகளின் மனநிலை பற்றி ‘‘மாண்டிசொரி இரண்டு’’ பகுதியில் காணவும்.நன்றி!!!

வாழ்க்கைக் கல்வியே மாண்டிசொரிக் கல்வி: